இருக்கும் சம்பள விகிதத்தின் அடிப்படையில் இவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்துவதற்கு இரண்டாவது பே கமிஷனுக்கு அமைச்சரவர்கள் உறுதியாகச் சிபார்சு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இரண்டாவது சம்பளக் கமிஷனிடத்தில் இந்தத் துறையைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய கோரிக்கைகளை வைத்து விண்ணப்பித்துக் கொள்ளுவதற்கு வாய்ப்பும் வழியும் இருக்கிறது. அரசாங்கத் துறையிலிருந்தும் இதைச்சம்பளக் கமிஷனுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு வழிவகை இருக்குமானால் அது பற்றிய நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ளும்.

திரு. ஆர். கருப்பையா: மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பள விகிதங்கள் ஒரே அடிப்படையில் இல்லையென்றாலும், வேறுபாடு அதிகமாக இருப்பதையாவது குறைத்துச் சீர்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைத்தான் இரண்டாவது சம்பளக் கமிஷன் ஆராயும் என்று சொன்னேன்.

Government Arts College at Ponneri

* 211 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether this Government has changed the medium of instruction in the Loganathan Narayanaswamy Government Arts College, Ponneri into Tamil from English;

(*b*) if so, whether any alternative arrangement has been made for the minority Telugu speaking people of the Taluk, as it has been declared as a bilingual area by a Government Order a few years ago; and

(*c*) whether the Government propose to have at least one section in English for the benefit of the Telugu speaking people and such of those who desire to join in the English medium?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தாய்மொழி தமிழாயிராத மாணவர்கள் மட்டுமே ஆங்கிலப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென்கிற நிபந்தனைக்குட்பட்டு, கல்லூரிப் புகுமுக வகுப்பில் கலைப் பாடங்களில் ஆங்கிலப் பயிற்றுமொழிப் பிரிவு ஒன்றை வைத்துக் கொள்ள அரசு இக்கல்லூரிக்கு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. கே. விநாயகம்: அப்படி அனுமதி தந்திருந்தால், தமிழை தாய் மொழியாகக் கொள்ளாத மாணவர்கள் எத்தனை பேர் இப்பொழுது அந்த வகுப்பில் சேர்ந்திருக்கிறார்கள்?

1970 மார்ச் 5]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி விவரம் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Linguistic Minorities Commissioner has recognised certain areas as Telugu areas in this State, such as Madras City, Gudiyatham, Ponneri and other places. May I know from the Hon. Minister for Education whether arrangements have been made to provide English sections in all the Colleges in these areas?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பகுதிகளில் போதுமான அளவுக்கு மாணவர்கள்—வேறு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்—தங்களுக்கு ஆங்கிலத்தில் ஒரு பிரிவு இருக்கவேண்டும் என்று கோருவார்களானால், அந்த இடங்களில் அது கவனிக்கப்படும். சிறுபான்மையோரின் எண்ணிக்கை போதுமான அளவுக்கு இருக்குமானால் அது கவனிக்கப்படும்.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், பொன்னேரி கலைக் கல்லூரியில் கடந்த மூன்று ஆண்டுகளாக கெமிஸ்ட்ரி (மெயின்) எடுத்துப் படித்த மாணவர்கள் அங்கு அதற்குத் தேவைப்படும் காஸ் ப்ளான்ட் என்ற சாதனம் இல்லாத காரணத்தால், அவர்கள் இன்று சரியான முறையில் பரீட்சை எழுத முடியாமல் இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆம் என்றால், அந்த மாணவர்களுடைய குறையைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் அதற்கும் தொடர்பு இல்லையென்றாலும், அந்தக் கல்லூரி மாணவர்களுடைய கோரிக்கையின் மீது தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டிருக்கிறது.

Tamil as Part I subject in P.U.C.

*. 212 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Government have suggested to the Madras University authorities to make Tamil as Part I subject and English as Part II subject in Pre-University Course; and

(b) whether the suggestion has been accepted by the University?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம்.

திரு. கே. விநாயகம் : உயர்தரப்பள்ளிகளில் தமிழுக்கு முதலிடம் தந்து, ஆங்கிலத்திற்கு இரண்டாவது இடம் தந்திருப்பதுதான் இப்பொழுது வழக்கத்தில் இருந்து வருகிறது. இப்படி நாம் செய்கிறோம் என்று சொல்லி, 'நீங்களும் இப்படிச் செய்யுங்கள்' என்று யூனிவர்சிடி அதாரிடிசுக்கு சிபார்சு செய்வதினாலேயே தமிழுக்கு